இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 125 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 29 – திங்கள்கிழமை 15 டிசம்பர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 125 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 29 - Monday 15 December 2025 - Dak 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2025) தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் – திருமதி ரோஜா தம்பதியரின் மகன் எழில்மறவன் மற்றும் வெ.சரவணன் திருமதி சாந்தி தம்பதியரின் மகள் கிருத்திகா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், இரா.இராஜேந்திரன், அர. சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் தொல். திருமாவளவன், இரா.முத்தரசன், ஈ.ஆர்.ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மற்றும் பொன் குமார், தனியரசு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” பெற

# தகுதியான மகளிர் மீண்டும் விண்ணப்பிக்கலாம்!

## தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**தருமபுரி, டிச. 15 -**

**“கலைஞர் மகளிர் உரிமைத் தொகையினை இதுவரை பெறாத தகுதியான மகளிர் மீண்டும் விண்ணப்பிக்கலாம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரியில் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் இல்ல மணவிழாவை தலைமையேற்று நடத்தி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2025) தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் முனைவர் பெ.பழனியப்பன் - திருமதி ரோஜா தம்பதியரின் மகன் எழில்மறவன் மற்றும் வெ.சரவணன் - திருமதி சாந்தி தம்பதியரின் மகள் கிருத்திகா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய பாசத்திற்குரிய தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பழனியப்பன் அவர்களின் மகன் எழில் மறவன் அவர்களுக்கும், கிருத்திகா அவர்களுக்கும் நடக்கும் இந்த திருமண விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மண விழாவை நடத்தி வைத்து, அதேநேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூடிய சிறப்பான வாய்ப்பினை பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து அரசு நிகழ்ச்சிகள், புதிய புதிய திட்டங்களைத் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிகள், அதுமட்டுமல்லாமல் கட்சி நிகழ்ச்சிகள், ஆய்வுக்கூட்டங்கள், கழக குடும்பங்களில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள் என இப்படி பல்வேறு நிகழ்ச்சிகள், ஏராளமான நிகழ்ச்சி களுக்கு இடையில் உங்களை எல்லாம் பார்க்கும் நேரத்தில், அதுவும் பழனியப்பன் அவர்களின் இல்லத்தின் மணவிழா நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் பார்க்கும் நேரத்தில் எனக்கே ஒரு ரிலாக்ஸ் ஏற்பட்டிருக்கிறது.

**‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ நிகழ்ச்சி!**

நேற்று முன்தினம், நம்முடைய மகளிருக்கான திராவிட மாடல் அரசின் சார்பில் தீட்டப்படும் திட்டங்கள் மூலமாக கிடைத்துக்கொண்டிருக்கும் சாதனைகளை அடிப்படையாக வைத்து அந்த சகோதரிகளின் வெற்றிக்கான அடையாளமாக, அதை பகிர்ந்துகொள்ளும் வகையில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ என்ற தலைப்பில் ஒரு மாபெரும் நிகழ்ச்சியை சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடத்தினோம். நீங்களும் அதை தொலைக்காட்சிகளில் பாத்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல், நம்முடைய மகளிருக்கு கலைஞர் பெயரால் வழங்கக்கூடிய மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் மாதாமாதம் நாம் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு வழங்கிக்கொண்டிருக்கின்றோம். நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்றைய முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியின் மூலமாக கூடுதலாக 17 இலட்சம் சகோதரிகளுக்கு அந்த ஆயிரம் ரூபாயை வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்திருக்கிறேன். ஏற்கெனவே, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1 கோடியே 13 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டுவந்தது. ஆனால், நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியின் மூலமாக மேலும் கூடுதலாக 17 இலட்சம் சகோதரிகளுக்கு அதாவது 1 கோடியே 30 இலட்சம் பேருக்கு வழங்கக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

**தடங்கல்களைத் தாண்டி சாதனை படைத்திருக்கிறோம்!**

இன்னும் கூட சில தகுதி உள்ளவர்கள் விடுபட்டிருந்தால், அவர்கள் உடனடியாக கோரிக்கை வைத்தால் அவர்களுக்கும் நிச்சயமாக வழங்கப்படும் என்ற நம்பிக்கையையும், உறுதியையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அது இன்னும் உயரும் என்று கூட சொல்லியிருக்கிறேன்.

அப்படிப்பட்ட மகிழ்ச்சியான நாளில் தான், மற்றொரு பெருமிதமான செய்தியும் வெளியானது. அதை தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். அதாவது, ஒரு நாட்டின், ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான முக்கியமான அறிகுறியாக இருக்கும் GDP வளர்ச்சியில் இன்றைக்கு தமிழ்நாடு தான் நம்பர் ஒன் மாநிலமாக உருவாகியிருக்கிறது. இது நாங்கள் வெளியிட்ட அறிக்கை அல்ல. ரிசர்வ் வங்கி வெளியிட்டிருக்கும் அறிக்கை!

நீங்கள் நினைத்துப் பாருங்கள். எவ்வளவோ தடங்கல்கள். எவ்வளவோ சோதனைகள். அந்த சோதனைகளையெல்லாம் தாண்டி இன்றைக்கு சாதனை படைத்திருக்கும் ஆட்சிதான் தமிழ்நாட்டில் நடைபெறக்கூடிய திராவிட மாடல் ஆட்சி. மற்றொரு பக்கம், தேர்தல் வேலைகள். அதில் குறிப்பாக SIR என்ற ஒரு நடைமுறையை கொண்டுவந்து அந்த பணியும் நடைபெற்றுவருகிறது.

இங்கு எழுச்சி தமிழர் நம்முடைய தொல்.திருமாவளவன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டு சொன்னார். இன்றைக்கு SIR பணிகளை திராவிட முன்னேற்றக் கழகம் எந்தளவுக்கு அதன்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### வாக்காளர் பட்டியலில் இருந்து

## மேற்குவங்கத்தில் 59 லட்சம் பேர் நீக்கம்!

### முதல்வர் மம்தா பானர்ஜியின் தொகுதியில் 1,61 லட்சம் பேர் நீக்கம்!

கொல்கத்தா, டிச. 15-

மேற்குவங்க மாநிலத்தில் 59 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திவிர திருத்தம் நடைபெற்று வருகிறது. இம்மாநிலத்தில நீக்கப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையை தொகுதி வாரியாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இதில் அதிக வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் முதலமைச்சர் மம்தா பானர்ஜியின் பவானிப்பூர் தொகுதியும் ஒன்றாகும். இந்த தொகுதியில் கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட பட்டியல்படி ஒரு லட்சத்து 61ஆயிரத்து 509 வாக்காளர்கள் இருந்த நிலையில், தற்போது 44ஆயிரத்து 787 பேர் நீக்கப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக சவுரிங்கீ தொகுதியில் 74ஆயிரத்து 553 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். கொல்கத்தா துறைமுகம் தொகுதியில் 63ஆயிரத்து 730 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். மாநிலம் முழுவதும் மொத்தம் 59 லட்சம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது.

---

### 50 சதவீதம் வரி:

## மெக்சிகோவுக்கு இந்தியா எதிர்ப்பு!

டெல்லி, டிச. 15 -

தங்களுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளாத இந்தியா, சீனா, தென் கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரியை 50 சதவீதம் வரை உயர்த்துவதாக மெக்சிகோ அறிவித்துள்ளது.

இந்த வரி உயர்வு வரும் ஜனவரி மாதம் முதல் அமலாக உள்ளது. இந்நிலையில், ஒன்றிய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மெக்சிகோவின் தன்னிச்சையான வரி உயர்வுக்கு தகுந்த எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மெக்சிகோ உடனான நட்புறவை இந்தியா பெரிதும் மதிப்பதாகவும், முக்கிய வர்த்தக கூட்டாளியான மெக்சிகோவின் வரி உயர்வால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடன் ஒன்றிய அரசு ஆலோசனை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## டெல்லியில் நிலவும் மோசமான காற்று மாசுபாடு!

### 4ம் நிலை கட்டுப்பாடுகள் விதிப்பு!

டெல்லி, டிச. 15 -

டெல்லி மற்றும் புறநகர் பகுதிகளில் நிலவும் காற்று மாசுபாட்டின் தரக்குறியீடு 452 என தீவிர மோசமான நிலையில் உள்ளது. இதனால் உள்ளூர் மக்கள் மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். அதிகாலை வேளையில் அடந்த பனிமூட்டம் காரணமாக, எதிரே வரும் வாகனங்கள் தெரியாததால், சாலையில் செல்லும் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி சென்றன. மோசமான காற்று மாசுபாட்டை கட்டுக்குள் கொண்டு வர, டெல்லி அரசு 4ம் நிலை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அதன்படி, அண்டை மாநிலங்களில் இருந்து செல்லும் வாகனங்கள், டெல்லிக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை இயக்க கூடுதல் கட்டுப்பாடுகள், கட்டுமான பணிகளுக்கு தடை, பள்ளிகளை இயன்றவரை ஆன்லைன் மூலம் நடத்த வேண்டும், 50 சதவீத பணியாளர்களுடன் மட்டும் அலுவலகங்களை நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

---

### ஆஸ்திரேலியாவில்

## 16 வயதுக்கு உட்பட்டோருக்கு சமூக வலைதள தடை!

மெல்போன், டிச. 15 -

‘அவர்கள் குழந்தைகளாகவே இருக்கட்டும்’ (Let Them Be Kids) என்ற தலைப்பில் கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் ஒரு மிகப் பெரிய பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு சர்வதேச கவனத்தை ஈர்த்தது. அதன் எதிரொலியாகத்தான் இப்போது, ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த தடை செய்யும் சட்டம் அமலாகியுள்ளது.

கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் 16 வயதுக்கு உட்பட்டோர் சமூக வலைதளப் பயன்படுத்துவதற்கான தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் குழந்தைகள் மத்தியில் தற்கொலை மரணங்கள், தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ளும் போக்குகள் அதிகரித்த சூழலில் இந்தச் சட்டம் அவசியமானது என்று அரசுத் தரப்பில் அப்போது நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இப்போது இந்தத் தடைச் சட்டம் அமலாகியுள்ளது குறித்து பிரதமர் ஆண்டனி அல்பனீஸ், “இந்த நாள் ஆஸ்திரேலிய குடும்பங்கள் டெக் ஜாம்பவான்களிடம் இருந்து அதிகாரத்தைத் திரும்பப் பெற்ற நாள்.

குழந்தைகள் குழந்தைகளாகவே இருப்பதற்கான உரிமையை நிலைநாட்டிய நாள். இனி பெற்றோருக்கு அமைதி கிட்டும்” என்று பேட்டியளித்துள்ளார்.

---

## தமிழ்நாட்டில் பனிமூட்டம் அதிகரிப்பு!

சென்னை, டிச. 15 –

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, தென் தமிழகம், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் நேற்று லேசானது முதல் மிதமான மழை பெய்தது. தமிழகத்தின் மற்ற பகுதிகள், புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவும். தமிழகம், புதுச்சேரி,காரைக்காலில் அதிகாலையில் பனிமூட்டம் காணப்படும்.

டிச.15, 16ம் தேதிகளில் கடலோர தமிழகத்திலும், 17ம் தேதி தமிழகத்தில் பரவலாகவும், 18, 19ம் தேதிகளில் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கடந்த சில நாட்களாக தமிழகம் முழுவதும் குறைவான வெப்பநிலை பதிவாகி வருகிறது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் மலைப்பகுதியை பொருத்தவரை ஊட்டியில் 7 டிகிரி, கொடைக்கானல், குன்னூரில் 9 டிகிரி, ஏற்காட்டில் 10 டிகிரி, சமவெளிப் பகுதியை பொருத்தவரை திருத்தணியில் 16 டிகிரி, வேலூர், தருமபுரியில் 17 டிகிரி, புதுச்சேரி, சேலத்தில் 19 டிகிரி, சென்னை நுங்கம்பாக்கம், மீனம்பாக்கம், மாமல்லபுரம், கோவையில் 20 டிகிரி குளிர் பதிவாகியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று (டிச.15) குறைந்தபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும். இதனால், கடும் குளிர் நிலவும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

---

### லோக்-அதாலத்: தமிழ்நாடு முழுவதும்

## ஒரே நாளில் 1 லட்சம் வழக்குகளுக்கு தீர்வு!

### ரூ.858 கோடி இழப்பீடு!

சென்னை, டிச. 15 -

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற தேசிய லோக் அதாலத்தில் 1 லட்சத்து 3,884 நிலுவை வழக்குகளுக்கு ஒரே நாளில் தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 857.77 கோடி இழப்பீட்டுத் தொகைக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் தேசிய லோக்அதாலத் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு தலைவரும், உயர் நீதிமன்ற தலைமை நீதி பதியுமான எம்.எம்.ஶ்ரீவஸ்தவா அறிவுறுத்தல்படி வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி பி.பி.பாலாஜி மற்றும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் டி.என்.வள்ளிநாயகம், ஏ.ராமமூர்த்தி, எஸ்.கே. கிருஷ்ணன், எம்.ஜெயபால், பி.கோகுல்தாஸ் ஆகியோர் தலைமையிலும், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதி ஆர்.கலைமதி மற்றும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஜி.சொக்கலிங்கம், ஆர். தாரணி ஆகியோர் தலைமையிலும் நிலுவை வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

இதேபோல மாவட்ட மற்றும் தாலுகா அளவில் மொத்தம் 516 அமர்வுகள் ஏற்படுத்தப்பட்டு 1 லட்சத்து 3,884 நிலுவை வழக்குகளுக்கு நேற்று ஒரே நாளில் தீர்வு காணப்பட்டன. இதன்மூலம் மொத்தம் ரூ. 857.77 கோடிக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டு தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.